# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

தொலைபேசி எண் 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601



மாநிலத் தலைவர் — **மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர் — **மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்

**ந.குமாரவேல்**

**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு. பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

பொருளாளர் — **எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்

**இரா.பன்னீர்செல்வம்**

**சி.ஆர்.ராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி. கலைச்ல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச்செய்தி எண்,2/2017 நாள்,11.01.2017

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச் செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் வெளியிடும் பத்திரிகை செய்தி**

## போனஸ் அறிவிப்பு !
## அரசு ஊழியர்கள் எதிர்பார்ப்பும், தொடர் ஏமாற்றமும் !!

தமிழக அரசு ஊழியர், ஆசிரியர்கள், நிரந்தர(ம) தற்காலிக அரசு ஊழியர்கள், உள்ளாட்சி ஊழியர்கள் ஆகியோர்க்கு 2015–2016 ஆம் ஆண்டிற்கான மிகை ஊதியமாக(போனஸ்) சி (ம) டி பிரிவு உள்ளிட்ட ஊழியர்களுக்கு ரூ.3000 உச்சவரம்பாக கொண்டு ரூ.3000 போனஸ் மற்றும் ஏ (ம) பி பிரிவு ஊழியர்களுக்கு ரூ.1000 சிறப்பு மிகை ஊதியமாக அறிவித்தும், சிறப்பு காலமுறை ஊதியம்,தொகுப்பூதியம் மதிப்பூதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு ரூ.1000 மட்டும் சிறப்பு மிகை ஊதியமாக வழங்கிட 11.01.2017 அன்று அரசு அறிவி;ததுள்ளது.

கடந்த 2014–2015ஆம் ஆண்டிற்கான போனஸ் அறிவிப்பில் எந்த மாற்றமும் இல்லாமல் ஒரு ரூபாய் கூட உயர்த்தாமல் அறிவித்துள்ளது மிகுந்த ஏமாற்றத்தை அளித்துள்ளது. இந்நிலையில் மத்திய அரசு அதன் ஊழியர்களுக்கு 2014–2015 ஆம் அண்டு முதல் உச்சவரம்பை ரூ.7000 ஆக உயர்த்தி 2015 ஆம் ஆண்டு முதல் ரூ.7000 போனஸ் அறிவித்து அதற்கான நிலுவைத்தொகையினையும் வழங்கியுள்ளது. மத்திய அரசிற்கு இணையான ஊதியம் ஏற்ற கோட்பாடு அடிப்படையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை படிகளின்றி பெற்று வரும் நிலையில் தமிழக அரசு ஊழியர்களுக்கும் ரூ.7000 2014–2015ஆம் ஆண்டு முதல் நிலுவையுடன் வழங்கிட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசிடம் பல முறையீடுகளை வழங்கியுள்ள நிலையில் பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக சி (ம) டி பிரிவு ஊழியர்களுக்கு ரூ.7000 மற்றும் ஏ(ம)பி பிரிவு அலுவலர்களுக்கு ரூ.3000 ஓய்வூதியம் பெறுவோர்க்கு ரூ.1500 ரூபாயாக கிடைத்திடும் என்ற மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்த நிலையில், அரசின் இந்த அறிவிப்பு ஊழியர்கள் மத்தியில் ஏமாற்றத்தையும் வேதனையும் அளித்துள்ளது.

மறுபுறம் 2016 நவம்பர் 8 முதல் மத்திய அரசின் பணமதிப்பு நீக்கம்(செல்லாத நோட்டு பிரச்சனையில்) மக்களின் அன்றாட வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளதுபோல் அரசு ஊழியர்களும் மாத சம்பளத்தை ஏ.டி.எம் ல் எடுக்க இயலாமல் சொல்லொனா துயரத்திற்கும் இன்னல்களுக்கும் ஆட்பட்டுள்ளனர். இதன் எதார்த்ததை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று மாத ஊதியத்தை ரொக்கமாக வழங்கிட கோரிய நிலையில் அகவிலைப்படி அரசாணையில் நிலுவைத்தொகையினை வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என அரசு அறிவித்து அப்பணத்தையும் அரசு ஊழியர்கள் எடுத்திட இயலாமல் அல்லலுற்று வருகிற நிலை என்பது அரசு ஊழியர்கள் தொடர் ஏமாற்றத்தை சந்தித்து வருகின்றனர்.

எனவே அரசு உடனடியாக ஊதியம் உள்ளிட்ட பணப்பயன்களை ரொக்கமாகவும்,2015–2016ஆம் ஆண்டிற்கான போனஸ் தொகையான முறையே ரூ.7000,ரூ.3000 மற்றும் ரூ.1500 என்று வழங்கிட வலியுறுத்தியும் இன்று 11.01.2017 தமிழகம் முழுவதும் அனைத்து வட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் பங்கேற்ற கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

( மு.அன்பரசு )
பொதுச் செயலாளர்

பெறுநர்
ஆசிரியர்,
அனைத்து ஊடகங்கள்